Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 138/18**

**Deposition of witness for: PW - 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பழனியப்பன் | **Father/Husband Name** | : | ராமன் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **21.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம், கமுதி உட்கோட்டம், பெருநாழி சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 03.06.2017 ம் தேதி மேலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி மேலூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்து மனோகரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 11.00 மணிக்கு நிலையம் வந்து ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண் 309/2017 பிரிவுகள் 147, 148, 294(b), 341, 342, 323, 324, 506(2) இதசன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன், **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** முதல் தகவல் அறிக்கையும், புகாரின் அசலை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், ஒரு நகலை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். அன்றையதினம் 13.00 மணிக்கும் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பசாமி, இளையராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்ட பார்வை மகஜர்

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).**

பின்னர் பட்டியல் சாட்சிகள் மனோகரன், மோகன், குமார் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்நிலையில் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் ஜெயலட்சுமியின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி ஆஜர்**

**( எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்யவில்லை )**